(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

4. கவன ஈர்ப்பு

கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலைப் பல்கலைக்கழக நிருவாக நெறிமுறைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. பிசால். சுந்தரம், திரு. ந. நஞ்சப்பன், திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வி.பி. நாகைமாலி, திரு. ஆர். ராமமூர்த்தி, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11-30

3. தகவல் கோரல்–தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டில்லி பாபு, நீங்கள் தேவையில்லாததைப் பற்றியெல்லாம் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) நான் அதற்கெல்லாம் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் நான் பதில் சொல்லிவிட்டேன். அந்த பதில் அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய பதில்தான் இறுதியானது. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் மாற்றுவதற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. (குறுக்கீடுகள்) அதைப் பேச முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இந்தக் கவன ஈர்ப்பிலே நீங்கள் பேசுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். ஆறுமுகம், கவன ஈர்ப்பிலே நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, நீங்கள் அதெல்லாம் சொல்லமுடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகத்தை நான் பேச அழைத்துவிட்டேன், நீங்கள் அவரைப் பேச வேண்டாம் என்று சொன்னால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அது என்ன முறை? (குறுக்கீடுகள்) நீங்கள் எப்படி ஓர் உறுப்பினரைப் பேச வேண்டாம் என்று சொல்ல முடியும்? (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நீங்கள் சொல்ல முடியாது. செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எம். ஆறுமுகம், கவன ஈர்ப்பின்மீது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கவன ஈர்ப்பின்மீது பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் கவன ஈர்ப்பின்மீது பேசுகிறீர்களா, இல்லையா?

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவன ஈர்ப்பின்மீது பேசுகிறேன். பேச முடியாது என்று நான் சொல்லவில்லை. அதற்கு முன்னர் நாங்கள் ஏற்கெனவே கொடுத்திருக்கக்கூடியவற்றிற்கு நீங்கள் பதில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கெல்லாம் நான் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் நான் ஏற்கெனவே உங்களுக்கு முறையாக பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) ஆய்வில் இருக்கிற பொருள் குறித்து எதையும் பேசுவதற்கு, நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) அவற்றிற்குப் பதில் வந்தவுடன் நான் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இன்றைக்கும், நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்புக்குப் பதில் வந்தது. அதனால் இன்றைக்கு நான் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டேன். ஆகவே, பதில் வந்தவுடன் வரிசையாக நான் எடுத்துக்கொள்வேன். எனவே, அதையெல்லாம் நீங்கள் வற்புறுத்த முடியாது. திரு. எம். ஆறுமுகம், நீங்கள் கவன ஈர்ப்பின்மீது பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) அரசின் கவனத்தை ஈர்க்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்

அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கவன ஈர்ப்பை விட்டு வேறு ஏதோ பேசுகிறீர்கள். கவன ஈர்ப்பின்மீது பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்பின்மீது பேசுகிறீர்களா, இல்லையா?

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் திரு. என்.ஆர். ரெங்கராஜன் மற்றும் திரு. எஸ். ஜான் ஜேக்கப் ஆகியோர் எழுந்து பேச முயன்றனர்.)

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவன ஈர்ப்பின்மீது பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. எம். ஆறுமுகம் கவன ஈர்ப்பின்மீது பேசாமல், வேறு எதையோ பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் கொடுத்த அறிவிப்புக்கு தற்போது பதில் இல்லை, உட்காருங்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் திரு. என்.ஆர். ரெங்கராஜன் மற்றும் திரு. எஸ். ஜான் ஜேக்கப் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. எம். ஆறுமுகம், நீங்கள் கேள்வி கேட்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் கவன ஈர்ப்பின்மீது கேள்வி கேட்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்பின்மீது கேள்வி கேட்பதாக இருந்தால் நான் பேசுவதற்கு allow பண்ணுகிறேன். இல்லையென்றால், விடுங்கள், நான் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகிறேன். நான் அவையை நடத்த வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) உங்களுடைய சௌகரியத்திற்கு நான் அவையை நடத்த முடியாது. (குறுக்கீடுகள்) பேரவை விதியின்படி நான் அவையை நடத்த வேண்டும். உங்களுடைய சௌகரியத்திற்கு நான் அவையை நடத்த முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்பின்மீது பேசுவதாக இருந்தால் நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. எம். ஆறுமுகம், நீங்கள் கவன ஈர்ப்பின்மீது பேசுவதாக இருந்தால், நான் உங்களை அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு காலையிலிருந்து நிறைய பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) உங்களுக்குத் தேவையான

பதிலை நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) துறையிடமிருந்து பதில் வர, வரத்தான் நான் அவையில் எடுத்துக்கொள்ள முடியும். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) திரு. எம். ஆறுமுகம், கவன ஈர்ப்பின்மீது கேள்வி கேட்பதாக இருந்தால், கேளுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பதற்கு நீங்கள் பதில் சொல்லிவிட்டால் நான் கவன ஈர்ப்பின்மீது பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். ஆறுமுகம், நீங்கள் கேள்வி கேட்கிறீர்களா, இல்லையா?

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை குறித்து உங்கள் பதிலை நீங்கள் சொல்லிவிட்டால், நான் கவன ஈர்ப்பின்மீது பேசுகிறேன். நான் பேச முடியாது என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று உறுப்பினர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கேள்விக்குரிய பதில் அரசிடமிருந்து வந்தவுடன் எடுத்துக்கொள்வதாக பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அரசிடமிருந்து உரிய பதில் வந்தவுடன், அது உரிய முறையில் அவையில் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்கார்ந்து, அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். உட்கார்ந்து நான் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகிறார்கள். நீங்கள் உட்காருங்கள் என்று

2015 செப்டம்பர் 21]

சொன்னபோதும், உட்காராமல் இருக்கிறீர்கள். நீங்கள் திட்டமிட்டே அவையின் நடவடிக்கையை வேறு திசைக்குக் கொண்டு செல்லப் பார்க்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுவதைக் கேளுங்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: தயவு செய்து உட்காருங்கள்; தயவு செய்து ஒத்துழைப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறீர்கள். கவன ஈர்ப்பை எடுத்துக் கொண்டாலும் பேசாமல் இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்ததை நான் எடுத்துக்கொள்கிறேன். அப்படி நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பை எடுத்துக்கொண்டாலும், அதிலே பேசமாட்டேன் என்கிறீர்கள். உங்கள் சௌகரியத்திற்கு திடீரென்று வேறு ஒரு கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்ளுங்கள் என்கிறீர்கள். நீங்கள் சொல்லும் கவன ஈர்ப்புகளுக்கு அரசிடமிருந்து பதில் வராமல் நான் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உரிய பதிலைத் தந்துகொண்டிருக்கிறார். அரசிடமிருந்து உரிய பதில்கள் வர, வர ஒவ்வொரு நாளும் கவன ஈர்ப்பு ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்றைக்குக்கூட ஒரு கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்களை கவன ஈர்ப்பின்மீது பேசுங்கள் என்று அழைத்து, அவர் எழுந்து மைக் கேட்டு, அவர் பேசுவதற்கு மைக்கும் கொடுத்தாகிவிட்டது. பக்கத்தில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் அந்த மைக்கை ஆஃப் செய்கிறார்கள். இது எந்தவிதத்தில் நியாயம்? (குறுக்கீடு) அவர் பேச அனுமதி கோரி, மைக் வேண்டும் என்று கேட்டார்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அனுமதி கொடுத்துவிட்டார். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் பேச முற்படும்போது, மைக்கை ஆஃப் பண்ணுகிறார். (குறுக்கீடு)

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஆகவே, அமைதியுடன் பொறுமை காக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துறையிடமிருந்து பதில் வர, வர கவன ஈர்ப்பு எடுத்துக்கொண்டிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எம். ஆறுமுகம், கவன ஈர்ப்பில் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) சரி.

4. கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலைப் பல்கலைக்கழக நிருவாக நெறிமுறைகள்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலைப் பல்கலைக்கழக நிருவாக நெறிமுறைகள்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.